# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**15 |
| Name | : | **மாரிக்கண்ணு** |
| Husband Name | : | **ஜெயராமன்** |
| Address | : | **செட்டிக்குளம்** |
| Age | : | 55/2025 |

**தேதி : 15.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர் இல்லை.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். எதிரி வசந்தியை தெரியும். எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர். அவர் ஏற்கெனவே எனக்கு லோன் வாங்கி கொடுத்துள்ளார். அந்த வகையில் எனக்கு அவருடன் பழக்கம் ஏற்பட்டது. நான் அவருக்கு மாமனார் மற்றும் தங்கையின் மருத்துவ செலவிற்காகதனியார் நிதிநிறுவனங்களிலிருந்து கடன் தொகை பெற்று ரூ.1,25,000/- எதிரிக்கு கொடுத்தேன். மேற்படி கடன் தொகைகளை துறையூரில் உள்ள சத்தியா பைனான்ஸ், பெரம்பலூரில் உள்ள கிராம சக்தி, மற்றும் காரையிலுள்ள துவாரா ஆகிய நிதி நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொடுத்தேன். மேற்படி கடனுக்கான தவணை தொகைகளை எதிரி கட்டிவிடுவதாக கூறியதன் பேரில் வாங்கிகொடுத்தேன்.

மேற்படி தவணை தொகைகளை எதிரி திரும்ப செலுத்தாமல் தலைமறைவாகிவிட்டதால் நிதி நிறுவன ஊழியர்கள் என்னிடம் வந்து தவணை தொகைகளை திரும்ப செலுத்துமாறு கூறினார்கள்.

எதிரியை அவரது வீட்டில் சென்று விசாரித்தபோது அவர் வீட்டில் இல்லை. பிறகு இதுசம்மந்தமாக புகார் அளிக்க பாடாலூர் காவல் நிலையம் சென்றபோது அவர்கள் காவல் துணை கண்காணிப்பாளரிடம் புகார் அளிக்குமாறு அனுப்பிவிட்டார்கள். என்னை போல் பாதிக்கப்பட்ட சத்தியா என்பவர் இது சம்மந்தமாக புகார் அளித்தார். நிதி நிறுவனத்தால் கொடுக்கப்பட்ட கடன் அட்டைகளின் அசல் எதிரியிடம் உள்ளது. **சத்தியா மைக்ரோ கேபிடல் நிதி நிறுவனத்தில் கடன் பெற்றதற்கான கடன் அட்டையின் நகல் அ.சா.ஆ.44 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

வசந்தி எனக்கு பக்கத்து வீட்டில் குடியிருந்தார். எதிரிக்கு ஏற்கெனவே நான் கடன் வாங்கி கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. இதுதான் முதல்முறை. எதிரி தனது மாமனாருக்கு உடல்நிலை சரியில்லை என்றும், தனது தங்கைக்கு அபாசன் ஆகிவிட்டாக என்று சொல்லியும் கடன் வாங்கினார். இதற்கு முன்பு எதிரி பணம் வாங்கி ஏமாற்றவில்லை என்ற நம்பிக்கையில்தான் கடன் வாங்கிகொடுத்தேன் என்றால் சரிதான். எந்தெந்த தேதிகளில் கடன் வாஙகி கொடுத்தேன் என்று ஞாபகமில்லை. காரை துவாரா நிதிநிறுவனத்தில் வாங்கிய ரூ.50,000/-த்தில் எனக்கும், எதிரிக்கும் பாதி, பாதி கடன். மற்ற இரண்டு கடன்களை எதிரி முழுமையாக வாங்கிகொண்டார். சத்தியாவில் மூன்று தவணைகள், துவாராவில் ஐந்து தவணைகள், கிராம சக்தியில் 6 தவணைகள் எதிரி கட்டினார். நாங்கள் 39 பேரும் ஒரே நேரத்தில் சென்று பணம் கேட்டதால் தவணை தொகையை எதிரியால் கட்டமுடியவில்லை என்றால் சரியல்ல. எதிரி ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்தில் பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் வாங்கிய கடன் தொகைகளை திரும்ப செலுத்தினால் வாங்கிகொள்வோம். எதிரி என்னை ஏமாற்ற வேண்டும் என்ற

எண்ணத்துடனும், மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணமும் கிடையாது என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.